# மாகாணக் கல்வித் திணைக்களம்
# வடக்கு மாகாணம்
# பயிற்சிப் பரீட்சை- 2020

**தரம் 13 (2020)** **கணக்கீடு 33-T-11** **மூன்று மணித்தியாலம்**

**மேலதிக வாசிப்பு நேரம் 10 நிமிடங்கள்**

❖ **வினாப்பத்திரத்தை வாசித்து வினாக்களை தெரிவு செய்வதற்கும் விடை எழுதும்போது முன்னுரிமை வழங்கும் வினாக்களை ஒழுங்கமைத்துக் கொள்வதற்கும் மேலதிக வாசிப்பு நேரத்தை பயன்படுத்துக.**

**அறிவுறுத்தல்கள்**

❖ **முதலாம் இரண்டாம் வினா உட்பட ஐந்து வினாக்களுக்கு விடை தருக.**

01) வரையறுத்த சிறிபுர கம்பனியின் ஏடுகளில் இருந்து பிரித்தெடுக்கப்பட்ட 31 மார்ச் 2019 இல் முடிவடைந்த ஆண்டிற்கான பரீட்சை மீதி வருமாறு

| விபரம் | ரூ.000' | ரூ.000' |
|---|---|---|
| காணி – கிரயம் | 109 936 | |
| கட்டடம் - கிரயம் | 39 000 | |
| மோட்டார் வாகனம் | 20 300 | |
| 01.04.2018 இல் திரண்ட தேய்வு | | |
| கட்டடம் | | 8 800 |
| மோட்டார் வாகனம் | | 7 200 |
| 01.04.2018ல் சரக்கிருப்புக்கள் | 1 800 | |
| விற்பனைகள் | | 98 336 |
| கொள்வனவுகள் | 52 416 | |
| நிதிச் செலவுகள் | 1 800 | |
| உள்வந்த வண்டிக் கூலி | 500 | |
| விற்பனை விநியோகச் செலவுகள் | 7 500 | |
| நிர்வாகச் செலவுகள் | 7 973 | |
| 2017 / 2018 இறுதிக் காலாண்டு வருமான வரி ஏற்பாடு | | 1 200 |
| கூறப்பட்ட மூலதனம் சாதாரண பங்கு | | 105 000 |
| பங்கு வழங்கல் மூலம் பெறப்பட்ட பணம் | | 2 000 |
| 01.04.2018 இல் நிறுத்தி வைத்த இலாபம் | | 10 264 |
| பொது ஒதுக்கம் | | 1 500 |
| தொகுதிக்கடன் 12% | | 8 000 |
| மீள்மதிப்பீட்டு ஒதுக்கம் | | 2 250 |
| மோட்டார் வாகன விற்பனை | | 500 |
| வருமானவரிக் கொடுப்பனவு | 3 900 | |
| விற்பனை உத்தரவாத ஏற்பாடு 01.04.2018 இல் | | 550 |
| காசு | 475 | |
| | 245 600 | 245 600 |

**மேலதிக தவல்கள் :**

1. 31.03.2019 இல் இறுதிச் சரக்கிருப்பானது கிரயத்தில் ரூ.5 000 000 ஆக மதிப்பிடப்பட்டதுடன் அத்திகதியில் அதன் தேறிய நிகரப் பெறுமதி ரூ.3 900 000 ஆகக் காணப்பட்டது.
2. இக் கம்பனியானது 12 % பெறுமதி சேர் வரிக்கு (VAT) பதிவு செய்த கம்பனியாகும். கொள்வனவு, விற்பனைப் பெறுமதிகளில் 12% VAT உள்ளடங்கியுள்ளது.

3. செலுத்திய வருமானவரியானது முன்னைய வருடத்திற்காக செலுத்திய ரூ.1450 000 ஐயும் நடைமுறை வருடத்தில் முதல் மூன்று காலாண்டுக்கு செலுத்திய வருமானவரியையும் உள்ளடக்கியுள்ளது. நடைமுறை வருடத்தில் இறுதிக் காலாண்டுக்கான வருமானவரிப் பொறுப்பானது ரூ.600 000 ஆக மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது. இத்தொகை இன்னும் சீராக்கப்படவில்லை.
4. 40 000 சாதாரண பங்குகள் நடப்பாண்டின் போது பொது வழங்கல் செய்யப்பட்ட பெறப்பட்ட பணமானது தனியாகதொரு கணக்கில் பதிவு செய்யப்பட்டுள்ளது.
5. 01.04.2015 இல் ரூ.800 000 ற்கு வாங்கப்பட்ட மோட்டார் வாகனம் 31.03.2019இல் ரூ.500 000 ற்கு விற்கப்பட்டது. இவ் மோட்டார் விற்பனை இலாபம் மோட்டார் விற்பனைக் கணக்கில் பதியப்பட்டுள்ளது.
6. நடைமுறையல்லாச் சொத்துக்களுக்கு பின்வருமாறு தேய்விடப்படுகின்றது. கட்டடம் கிரயத்தில் 15%, மோட்டார் வாகனம் கிரயத்தில் 10%
7. இக் கம்பனியானது ரூ.2 000 000 பெறுமதியான காணியொன்றை 1.4.2018 இல் அரசாங்கத்திற்கு நன்கொடையாக வழங்கியது. மீதிக் காணியானது ரூ.110 000 000 ஆக மீள்மதிப்பீடு செய்யப்பட்டது. இச் சீராக்கம் தொடர்பில் கணக்கு புத்தகங்களில் எவ்வித பதிவுகளும் மேற்கொள்ளப்படவில்லை.
8. பொறி ஒன்று 5 வருட நிதிக் குத்தகை அடிப்படையில் 01.04.2018இல் பெறப்பட்டது. இதன் நியாயமான பெறுமதி ரூ.4 000 000 ஆகும். இச் சொத்தின் உடமையானது குத்தகையின் தவணை இறுதியில் கம்பனிக்கு மாற்றப்படும். குத்தகை வட்டியானது முதலாம், இரண்டாம் வருடங்களுக்கு முறையே ரூ.400 000, ரூ.318 000 ஆகும். வருடாந்த குத்தகைத் தவணைக்கட்டணம் ரூ.1 200 000 ஆகும். இது வருட முடிவில் செலுத்தப்பட்டுள்ளதுடன் நிதிக்கிரயமாக பதியப்பட்டுள்ளது. இக் கொடுக்கல் வாங்கல் தொடர்பில் வேறு எப்பதிவுகளும் இடம்பெறவில்லை.
9. நிர்வாகச் செலவினுள் இயக்குனர் கட்டணம் ரூ.250 000, கணக்காய்வுக்கட்டணம் ரூ.325 000 உள்ளடக்கப்பட்டுள்ளது. 31.03.2019 இல் முடிவடைந்த ஆண்டுக்கான கணக்காய்வுக் கட்டணம் ரூ.500 000 ஆகும்.
10. கம்பனியானது பொருட்களை ஒரு வருட உத்தரவாதத்தில் விற்பனை செய்வதுடன் கடந்த வருடத்தில் செய்யப்பட்ட விற்பனைகளுக்காக நடைமுறை வருடத்தில் செலுத்திய உத்தரவாதச் செலவுகள் ரூ. 380 000 ஆகும். இது நடைமுறைவருடத்திற்கான விநியோகக் கிரயத்தில் உள்ளடக்கப்பட்டள்ளது. 31.03.2019 இல் உத்தரவாதத்துக்கான ஏற்பாடானது ரூ.580 000 ஆக மதிப்பிடப்பட்டது.
11. கம்பனியின் பணிப்பாளர் சபையால் பின்வரும் தீர்மானங்கள் எடுக்கப்பட்டன.
    - ரூ.500 000 ஐ பொதுஒதுக்கத்திற்கு மாற்றுதல்
    - செலுத்திய இடைக்கால பங்கு லாபம் ரூ.500 000 நிர்வாகக் கிரயத்தில் உள்ளடங்கியுள்ளது. இயக்குனர்கள் 30.05.2019ல் பங்குதாரர்களுக்கு ரூ.800 000 இறுதிப் பங்குலாபத்தினைப் பிரேரித்தனர்.

**வேண்டப்படுவது :**

LKAS 1 (நிதிக் கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்) இன் படி பிரசுரிப்பதற்குத் தேவையான வரையறுத்த சிறிபுர கம்பனியின் பின்வரும் நிதிக்கூற்றுக்கள் (குறிப்புக்கள் உட்பட)

1. 31.03.2019இல் முடிவடைந்த வருடத்திற்கான இலாபம் அல்லது நட்டம் மற்றும் ஏனைய முற்றுமடங்கிய வருமானக் கூற்று
2. 31.03.2019 இல் முடிவடைந்த வருடத்திற்கான உரிமையாண்மை மாற்றல் கூற்று
3. 31.03.2019ல் உள்ளவாறான நிதிநிலமைக் கூற்று (40 புள்ளிகள்)

02) அ) X எனும் பொருளை உற்பத்தி செய்யும் கம்பனியொன்று விசேட வகையான A எனும் மூலப் பொருளை இவ்உற்பத்தியில் பயன்படுத்துகின்றது. ஒரு அலகு X பொருளை உற்பத்தி செய்வதற்கு A எனும் மூலப்பொருளில் 2 Kg தேவைப்படுகின்றது. X பொருள் தொடர்பான மேலதிக தகவல்கள் வருமாறு.

வருடாந்த கேள்வி 36 000 கிலோகிராம்

இருப்பு வைப்புச் செலவு அலகொன்றுக்கு ரூ.8

ஒரு கட்டளைக்கான செலவு ரூ.10

பயன்படுத்திய அலகுகள் ஆகக் குறைந்தது 150 ஆகக் கூடியது 200

முதன்மைக் காலம் வாரங்கள் ஆகக் குறைந்தது 2 ஆகக் கூடியது 4

பின்வருவனவற்றைக் கணிக்குக

1. சிக்கனக் கட்டளைத் தொகை (EOQ)
2. ஒரு வருடத்திற்குரிய கட்டளைகளின் எண்ணிக்கை
3. மறு கட்டளை மட்டம்
4. இழிவு இருப்பு மட்டம்
5. உச்ச இருப்பு மட்டம்
6. சராசரி இருப்பு மட்டம்

ஆ) பின்வரும் தகவல்கள் 2020 தை 31 இல் முடிவடைந்த வாரத்திற்கான சுபறீ கம்பனி ஊழியர்களின் கொடுப்பனவுடன் தொடர்புடையது.

| ஊழியர் பெயர் | வேலை செய்யும் மணித்தியாலங்கள் | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | திங்கள் | செவ்வாய் | புதன் | வியாழன் | வெள்ளி | சனி | ஞாயிறு |
| அமல் | 8 | 8 | 8 | 8 | 10 | - | - |
| விமல் | 8 | 8 | 8 | 8 | 8 | 4 | - |
| நிமல் | 8 | 8 | 8 | 8 | 8 | - | 4 |

கொடுப்பனவுகள் பின்வருமாறு செலுத்தப்படுகின்றது

1. வாரமொன்றுக்கு முதல் 40 மணித்தியாலங்களுக்கு (ஞாயிறு தவிர) மணித்தியாலம் ஒன்றுக்கு ரூ.60 படி
2. மேலதிக நேரக் கொடுப்பனவு வழமைக் கொடுப்பனவின் 150% (ஞாயிறு தவிர), ஞாயிறு தினங்களில் வழமைக் கொடுப்பனவின் 2 மடங்கு
3. வேலைகொள்வோர், ஊழியரின் ஊழியர் சேமலாபநிதிப் பங்களிப்புக்கள் முறையே 15%, 10% ஆகும். (ஊழியர்சேமலாபநிதிக் கணிப்பீட்டில் மேலதிக நேரக் கொடுப்பனவு கருத்தில் கொள்ளப்படுவதில்லை)
4. நிமல் இவ்வாரத்தில் பெற்றுக் கொண்ட சம்பள முற்பணம் ரூ.300 ஆகும்.
5. விமல் வங்கிஒன்றில் பெற்றுக் கொண்ட கடனின் தவணைப் பணக் கொடப்பனவாக ரூ.250 சம்பளத்தில் இருந்து கழித்து அதனை வங்கிக்கு அனுப்புவதற்கு அதிகாரம் வழங்கியுள்ளார்.

**வேண்டப்படுவது**

1. 31.01.2020 இல் முடிவடைந்த வாரத்திற்கான சம்பளப்பட்டியல்

2. சம்பளப் பட்டியலில் உள்ள விடயங்களை கூலிக் கட்டுப்பாட்டினூடாக பொதுப் பேரேட்டில் பதிக. (20 புள்ளிகள்)

03) ஹரி என்பவர் 01.04.2018 இல் வியாபாரமொன்றைத் தொடங்கினார். 31.03.2019 இல் உள்ளவாறான ஹரி வணிகத்தின் வரைபு நிதிக்கூற்றுக்களில் இருந்து பிரித்தெடுக்கப்பட்ட மீதிகள் கீழே தரப்பட்டுள்ளன.

| | (ரூ.000') |
|---|---|
| ஆதனம், பொறி, உபகரணங்கள் கிரயத்தில் | 3200 |
| இருப்புக்கள் | 500 |
| வியாபார வருமதிகள் | 600 |
| முற்செலுத்திய காப்புறுதி | 250 |
| காசுமீதி | 450 |
| வியாபார கொடுக்குமதிகள் | 700 |
| வங்கிக்கடன் | 1500 |
| அட்டுறு செலவுகள் | 300 |
| 31.03.2019 இல் முடிவடைந்த வருடத்திற்கான இலாபம் | 800 |
| 01.04.2018ல் மூலதனம் | 1700 |

31.03.2019 இல் வரைபு நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கும் போது பின்வரும் விடயங்கள் கருத்தில் கொள்ளப்படவில்லை என்பது பின்னர் கண்டுபிடிக்கப்பட்டது.

1. மீள்விற்பனைக்கான பொருட்கள் கடனுக்கு கொள்வனவு 400 000 வியாபாரக்கழிவு 10% ஏடுகளில் பதியப்படவில்லை
2. ரூ.250 000 பெறுமதியான வருமதியாளர் ஒருவர் தனது கடனை முற்றாகத் தீர்ப்பதற்காக செலுத்திய காசு ரூ.240 000 ஏடுகளில் பதியப்படவில்லை.
3. வணிகத்தின் உரிமையாளரான ஹரி தனது சொந்த நிதியில் இருந்து வணிகத்தின் வங்கிக்கடன் வட்டி ரூ.15 000 உட்பட வங்கிக்கடன் தவணைப்பணம் செலுத்தியது ரூ.150 000.
4. 31.03.2019 இல் முவெடைந்த வருடத்திற்கான ஆதனம் பொறி உபகரணங்களின் பெறுமானத் தேய்வு ரூ.320 000 ஆகும்.
5. 31.03.2019 இல் 230 000 கிரயமான பொருட்கள் ரூ.350 000 ற்கு கடனுக்கு விற்கப்பட்டது. புத்தகங்களில் பதியப்படவில்லை.
6. 2019 மார்ச் மாத வாடகை ரூ.8 000 ஆனது 31.03.2019 வரை செலுத்தப்படவோ கணக்கில் பதியப்படவோ இல்லை.
7. கடனுக்கு விற்கப்பட்ட பண்டங்களில் ரூ.10 000 கிரயம் பெறுமதியான சரக்குகள் உட்திருப்பப்பட்டது ஏடுகளில் பதியப்படவில்லை.
8. 2019 மார்ச் மாதத்திற்கான காப்புறுதிக்கட்டணம் ரூ.120 000 முற்செலுத்திய காப்புறுதிக் கட்டணக் கணக்கில் பதியப்பட்டுள்ளது.
9. காலங்கடந்த வியாபார வருமதியாளர் மீது விதித்த வட்டி ரூ.10 000 ஏடுகளில் பதியப்படவில்லை.
10. சிறுவர் பராமரிப்பு நிலையம் ஒன்றுக்கு நன்கொடையாகக் கொடுத்த இருப்புக்கள் ரூ.30 000 ஏடுகளில் பதியப்படவில்லை.

**வேண்டப்படுவது :**

1. கணக்கீட்டுச் சமன்பாட்டினைப் பயன்படுத்தி (1) தொடக்கம் (10) வரையிலுள்ள உருப்படிகளின் தாக்கத்தினை (பெறுமதிகளுடன்) காட்டுவதுடன், ஒவ்வொரு பெறுமதியும் அதிகரிக்குமாயின் (+) எனவும்,

குறைவடையுமாயின் (-) எனவும் அந்தப் பெறுமதிகளுக்கு எதிரே குறிப்பிடுக. (இவ் வினாவிற்கு விடையளிப்பதற்காக கீழே தரப்பட்ட மாதிரியைப் பயன்படுத்துக)

| நடவடிக்கை இல | சொத்துக்கள் | | | | | பொறுப்புக்கள் | | | உரிமையாண்மை |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | ஆதனம் பொறி உபகரணம் | இருப்புக்கள் | வியாபார வருமதிகள் | முற்செலுத்திய வாடகை | காசு | வியாபார கொடுக்குமதி | அட்டுறு செலவுகள் | வங்கிக்கடன் | |
| மீதி | 3200 | 500 | 600 | 250 | 450 | 700 | 300 | 1500 | 2500 |
| 1. | | | | | | | | | |
| ….. | | | | | | | | | |
| திருத்திய மீதி | | | | | | | | | |

2. 31.03.2019 இல் முடிவடைந்த வருடத்திற்கான திருத்திய வரைபு இலாபத்தைக் காட்டுவதற்கான கூற்று

3. 31.03.2019 ம் திகதி விற்பனைப் பேரேட்டு அட்டவணை மீதியும் பொதுப்பேரேட்டில் உள்ள வியாபார வருமதியாளர் மீதியும் பின்வரும் காரணங்களால் வேறுபட்டுக் காணப்பட்டன.
   (i) வருமதியாளர் மீது விதித்த தண்ட வட்டி ரூ.10 000 கட்டுப்பாட்டுக் கணக்கில் சரியாகப் பதியப்பட்ட போதிலும் குறித்த கடன்பட்டோர் பேரேட்டில் செலவில் பதியப்பட்டுள்ளது.
   (ii) கமலுக்கு விற்பனை ரூ.40 000 கமல் கணக்கில் சரியாகப் பதியப்பட்ட போதிலும் கடன்பட்டோர் கட்டுப்பாட்டுக் கணக்கில் ரூ.4 000 எனப் பதியப்பட்டது.
   (iii) வருமதியாளரான ராஜாவிடம் இருந்து பெற்ற காசு ரூ.50 000 ஏடுகளில் முற்றாகப் பதியப்படவில்லை.
   (iv) கடன்பட்டோர் பேரேட்டு மீதிகளை அட்டவணைப்படுத்தும் போது கடன்பட்டோர் ஒருவரின் செலவு மீதி ரூ.2 000 வரவு மீதியாகக் கொள்ளப்பட்டு விற்பனைப் பேரேட்டு அட்டவணை மீதி தயாரிக்கப்பட்டது.

**வேண்டப்படுவது :**

1. பொதுப்பேரேட்டில் தவறுகளைத் திருத்துவதற்கான நாட்குறிப்பு பதிவுகளைத் தருக.
2. 2019.03.31 இல் திருத்திய கடன்பட்டோர் கட்டுப்பாட்டுக் கணக்கு
3. 2019.03.31 இல் கடன்பட்டோர் கட்டுப்பாட்டுக் கணக்கிணக்கக் கூற்றினைத் தயாரித்து சீராக்கு முன் கடன்பட்டோர் பேரேட்டு அட்டவணை மீதியைக் காண்க.

(20 புள்ளிகள்)

04)

அ) கஜன் என்பவரினால் சிறுவர்களுக்கான ஆடைகளைக் கொள்வனவு செய்து விற்பனை செய்கின்ற வணிகம் ஒன்று நடாத்தப்படுகின்றது. அவருடைய புத்தகங்களில் இருந்து 2020.01.01 இல் பெயர்த்தெடுக்கப்பட்ட மீதிகள் வருமாறு

| | (ரூ.000') |
|---|---|
| 2020.01.01இல் மீதி - காசு | 750 |
| ஆடை இருப்புக்கள் | 620 |
| வியாபாரக் கொடுக்குமதி | 350 |
| சென்மதி VAT | 40 |
| அட்டுறு வாடகை | 30 |

2020 ஜனவரி மாதத்தில் இடம்பெற்ற காசுக் கொடுப்பனவுகளும் கடன் கொள்வனவுகளும் வருமாறு

02.01 ஆடைகள் கொள்வனவு (கைச்சாத்து இல 001) ரூ.50 000

08.01 ரோஜாவிடம் கடனுக்கு கொள்வனவு ரூ.200 000 வியாபாரக் கழிவு 10% (பட்டியல் இல 12)

11.01 செலுத்திய மின்சாரக் கட்டணம் ரூ.22 000 (கைச்சாத்து இல 002)

14.01 ராஜாவிடம் கடனுக்கு கொள்வனவு ரூ.250 000 (பட்டியல் இல 35)

18.01 வியாபாரக் கொடுக்குமதியாளரான பூஜாவிற்கு செலுத்திய காசு ரூ.330 000 பெற்ற கழிவு ரூ.20 000 ( கைச்சாத்து இல 003)

21.01 செலுத்திய வாடகை 12 000 (கைச்சாத்து இல 004)

24.01 ரோஜாவிற்கு முழுத் தொகையும் 10% கழிவு பெற்றுக் கொண்டு செலுத்தப்பட்டது.

28.01 புதிய தையல் இயந்திரம் வாங்கியது ரூ.90 000

**மேலதிக தகவல்கள்**

1. கடன்கொள்வனவு, கடன் விற்பனைகள் தொடர்பில் 15% VAT பதிவு செய்யப்பட்டுள்ளது. மேலுள்ள கொள்வனவுகளில் VAT உள்ளடங்கவில்லை.
2. தை மாதத்திற்கான வாடகைக் கட்டணம் ரூ.15 000 ஆகும்
3. 31.01.2020 இல் காசுப் பெறுவனவு நாட்குறிப்பேட்டின் மொத்தம் 775 000.

**வேண்டப்படுவது.**

1. மேலே தரப்பட்ட கொடுக்கல் வாங்கல்களை பின்வரும் மூலப்பதிவேடுகளில் பதிவு செய்க.
   a) காசுக் கொடுப்பனவு நாட்குறிப்பேடு
   b) கொள்வனவு நாட்குறிப்பு
2. பொதுப்பேரேட்டில் பின்வரும் கணக்குகளைத் தயாரிக்குக.
   a) காசுக்கட்டுப்பாட்டுக் கணக்கு (மொத்தப் பெறுமதி அடிப்படையில்)
   b) கொள்வனவுக் கணக்கு
   c) வியாபார சென்மதியாளர் கணக்கு
   d) VAT கணக்கு
   e) சென்மதி வாடகைக் கணக்கு (12 புள்ளிகள்)

ஆ) அப்துல்லா வணிகம் முறையான கணக்கு பதிவுகளை பராமரிக்கவில்லை. எனினும் பின்வரும் தகவல்கள் பெறக்கூடியதாக இருந்தது.

| | 01.04.2018 | 31.03.2019 |
|---|---|---|
| காணி கட்டடம் | 400 000 | 485 000 |
| இயந்திரம் | 70 000 | 105 000 |
| வியாபார இருப்பு | - | 45 000 |
| சென்மதி செயற்பாட்டுச் செலவு | 5 000 | 10 000 |
| எழுதுபொருள் இருப்பு | 3 500 | 2 000 |
| காசு மீதி | 80 000 | ? |
| வியாபார வருமதியாளர் | 60 000 | 50 000 |
| வியாபார கொடுக்குமதிகள் | 80 000 | 60 000 |

2019.03.31 இல் முடிவடைந்த காலத்தில் இடம் பெற்ற கொடுக்கல் வாங்கல்களும் நிகழ்வுகளும் வருமாறு

| | |
|---|---|
| காசு விற்பனை | 40 000 |
| செயற்பாட்டுச் செலவுக் கொடுப்பனவு | 35 000 |
| இயந்திரக் கொள்வனவு | 60 000 |
| கட்டிடம் அமைத்தல் | 100 000 |
| அனுமதித்த கழிவு | 4 000 |
| கிடைத்த கழிவு | 3 000 |
| அறவிட முடியாக்கடன் பதிவளிப்பு | 4 000 |
| வருமதியாளரிடம் பெற்ற காசு | 330 000 |
| எழுதுபொருள் கொள்வனவு | 2 000 |
| வியாபாரக் கொடுக்குமதியாளருக்கு கொடுப்பனவு | 250 000 |

**வேண்டப்படுவது :**

1. 2019.03.31 இல் முடிவடைந்த வருடத்திற்கான வருமானக்கூற்று
2. 2019.03.31 இல் உள்ளவாறான நதிநிலமைக்கூற்று

(08 புள்ளிகள்)

05) அ. ரங்காவும் கங்காவும் இணைந்து இலாப நட்டங்களை சமமாக பகிரும் பங்குடமை வணிகம் ஒன்றை நடாத்தி வருகின்றனர். இப் பங்குடமையில் 01.04.2018 இல் லிங்கா என்பவர் புதிய பங்காளராக ரூ. 3 000 000 மூலதனத்துடன் இணைத்துக் கொள்ளப்பட்டார். லிங்கா பங்காளராக இணைத்துக் கொள்ளப்பட்ட பின்னர் பங்குடமை உடன்படிக்கை வருமாறு

- பங்குடமையின் புதிய இலாப நட்ட விகிதம் ரங்கா, கங்கா, லிங்காவிடையே முறையே 5 : 3 : 2 எனப் பகிர்ந்து கொண்டனர்.
- பங்காளர் மாதாந்த சம்பளம் முறையே ரங்கா – 30 000, கங்கா – 40 000, லிங்கா – 20 000 பெற உரித்துடையவர்கள்.
- பங்காளர்கள் 10% மூலதன வட்டி பெற உரித்துடையவர்கள்.

31.03.2019 இல் முடிவடைந்த ஆண்டிற்கான பரீட்சைமீதி வருமாறு

| விபரம் | வரவு '000' | செலவு '000' |
|---|---|---|
| 2018.04.01 இல் மூலதனக் கணக்கு மீதி – ரங்கா | | 4 000 |
| கங்கா | | 3 000 |
| நடைமுறைக் கணக்கு மீதி – ரங்கா | | 200 |
| கங்கா | | 100 |
| லிங்கா காசாக முதலிட்டது | | 3 000 |
| விற்பனை | | 18 900 |
| விற்பனைக்கிரயம் | 8 550 | |
| இறுதி இருப்பு 31.03.2019 இல் | 1 150 | |
| ஆதனம் பொறி உபகரணம் - கிரயத்தில் | 20 000 | |
| திரண்ட தேய்வு ஆதனம், பொறி, உபகரணம் 1.4.2018 இல் | | 3 500 |
| வாடகை | 800 | |
| காப்புறுதிக் கட்டணம் | 500 | |
| கழிவுகள் | 450 | 750 |
| சம்பளங்கள் | 1 450 | |
| அலுவலகச் செலவு | 1 100 | |
| வருமதியாளர், சென்மதியாளர் | 1 550 | 2 150 |
| அறவிட முடியாக் கடன் | 450 | |
| கடன்கணக்கு – லிங்கா | | 1 800 |
| எடுப்பனவுகள் - ரங்கா | 500 | |
| - கங்கா | 400 | |
| - லிங்கா | 300 | |
| வங்கிமேலதிகப் பற்று | | 600 |
| முதலீடுகள் | 800 | |
| | 38 000 | 38 000 |

**மேலதிக தகவல்கள்**

1. 2018.04.01 இல் பங்குடமையின் நன்மதிப்பு ரூ. 1 200 000 என மதிப்பிடப்பட்டதுடன் நன்மதிப்பானது பங்காளர் மூலதனக் கணக்கினூடாகச் சீராக்கம் செய்யப்படும்.
2. நிதியாண்டு காலத்தில் வியாபாரத்திலிருந்து ரூ. 40 000 கிரயமான பொருட்களை ரங்கா பற்றியிருந்தார். இது வியாபாரத்தின் ஏடுகளில் பதியப்படவில்லை.
3. காப்புறுதியினுள் கங்காவினுடைய ஆயுட்காப்புறுதிக் கட்டணம் ரூ.50 000 அடங்கியுள்ளது.
4. நிறுவனம் ஆதனம், பொறி, உபகரணங்களுக்கு கிரயத்தில் 10% தேய்விடுவது வழக்கம்.
5. சம்பளங்கள் என்பதனுள் பங்காளர் ஒவ்வொருவருக்கும் வழங்கிய 6 மாத சம்பளங்கள் உள்ளடக்கப்பட்டுள்ளது.
6. லிங்கா கடனுக்கான வட்டி எதுவும் இதுவரை செலுத்தப்படவில்லை.
7. ரூ. 150 000 அறவிடமுடியாக் கடனாகப் பதிவளிக்கத் தீர்மானிக்கப்பட்டது.
8. முதலீடுகள் என்பது 01.01.2019 இல் 3 வருடத்திற்கு வைப்புச் செய்த நிலையாண வைப்பாகும். இதன் வட்டி வீதம் 12% ஆகும்.

**வேண்டப்படுவது**

1. 2019.03.31 இல் முடிவடைந்த வருடத்திற்கான பங்குடமையின் வருமானக்கூற்று (பகிர்வுக் கூற்று உட்பட)
2. 2019.03.31 இல் முடிவடைந்த வருடத்திற்கான பங்காளர் மூலதன, நடைமுறைக் கணக்கு

(20 புள்ளிகள்)

ஆ. வெள்ளிநிலா விளையாட்டுக் கழகத்தின் 31.12.2019 இல் முடிவடையும் வருடத்திற்கான காசுப் பெறுவனவுகள், காசுக்கொடுப்பனவகள் வருமாறு

கொள்ளல் கொடுத்தல் கணக்கு

| விபரம் | தொகை | விபரம் | தொகை |
|---|---|---|---|
| 2019.01.01ல் மீதி | 40 000 | வங்கிக்கடன் வட்டி | 18 000 |
| அங்கத்தவர் சந்தா | 50 000 | மின்கட்டணச் செலவகள் | 11 000 |
| சிற்றுண்டிப் பெறுவனவு | 110 000 | பத்திரிகை | 3 000 |
| ஆயுட்கால அங்கத்தவர் சந்தா | 60 000 | அச்சடித்தல் செலவு | 11 000 |
| பிரவேசக்கட்டணம் | 20 000 | சிற்றுண்டிச் சாலை செலவுகள் | 7 500 |
| வாடகை வருமானம் | 45 000 | எழுதுகருவிகள் | 10 000 |
| | | ஊழியர் சம்பளம் | 75 000 |
| | | தொலைபேசிக்கட்டணம் | 12 500 |
| | | சிற்றுண்டிச் சாலை உணவு | 55 000 |
| | | பராமரிப்புச் செலவு | 20 000 |
| | | 31.12.2019 இல் மீதி | 102 000 |
| | 325 000 | | 325 000 |

**மேலதிக தகவல்கள்**

1. 2019.01.01 இல் காணப்பட்ட மீதிகள்

| | |
|---|---|
| கட்டடம் | ரூ. 150 000 |
| விளையாட்டு மைதானம் | ரூ. 275 000 |
| தளபாடம் | ரூ. 80 000 |
| வங்கிக்கடன் | ரூ. 250 000 |

2. 2019.01.01 இல் இருந்து ஆயுள் அங்கத்துவ முறை செயற்படுத்தப்படுவதுடன் அத்தொகையில் ரூ. 3 000 ஐ மட்டும் வருமானமாகப் பகிர்ந்தளிப்பதற்கு அங்கத்தவர் உடன்பட்டனர்.
3. பிரவேசக்கட்டணங்களில் ரூ. 4 000 இனை வருடத்தின் வருமானமாகக் கருதப்பட வேண்டும்
4. 2018ம் ஆண்டிற்காக இவ் ஆண்டில் பெற்ற அங்கத்தவர் சந்தா ரூ. 8 000. 2020 ம் ஆண்டிற்காக பெற்ற அங்கத்துவக் கட்டணம் ரூ. 4 000 காசாகப் பெற்ற அங்கத்துவ சந்தாவில் உள்ளடங்கப்பட்டுள்ளது.
5. 2019.01.01 ம் திகதியில் சிற்றுண்டிச்சாலையின் உணவு இருப்பு ரூ.11 000 ஆக இருந்ததுடன் 2019.12.31 இல் ரூ. 9 000 ஆகவும் இருந்தது. அன்றைய தினங்களில் தளபாடங்களின் பெறுமானம் 10% குறைவடைந்திருந்தது.
6. ஊழியர் சம்பளத்தில் 20 % சிற்றுண்டிச்சாலை பணியாளருக்குரியதாகும்
7. வருடாந்த அங்கத்துவக் கட்டணம் அங்கத்தவர் ஒருவருக்கு ரூ. 1000 ஆகும்.

   2019.12.31 இல் அங்கத்தவர் எண்ணிக்கை 55 ஆகும். இவ் வருடத்தில் புதிதாக 20 அங்கத்தவர்கள் இணைத்துக் கொள்ளப்பட்டதுடன் இதில் 5 பேர் ஆயட்கால அங்கத்தவராவர். ஒருவரின் ஆயுட்கால அங்கத்துவக் கட்டணம் ரூ.12 000 ஆகும்.

**வேண்டப்படுவது**

2019.12.31 இல் முடிவடைந்த வருடத்திற்கான

1. அங்கத்துவ சந்தாக் கணக்கு
2. சிற்றுண்டிச்சாலை வருமானக்கூற்று
3. வெள்ளிநிலா விளையாட்டுக் கழகத்தின் வருமானக்கூற்று

06) 31.03.2018, 31.03.2019 இல் உள்ளவாறான வனஜா PLC நிறுவனத்தின் நிதிநிலமைக் கூற்றின் சுருக்கம் பின்வருமாறு தரப்பட்டுள்ளது.

| | 2019.03.31 | 2018.03.31 |
|---|---|---|
| | (ரூ.000) | (ரூ.000) |
| ஆதனம், பொறி மற்றும் உபகரணம் | 5 400 | 4 750 |
| இருப்புக்கள் | 850 | 1 000 |
| வியாபார வருமதிகள் | 520 | 400 |
| காசும் காசுக்கு சமனானவையும் | 360 | 550 |
| | 7 130 | 6 700 |
| சாதாரண பங்குமூலதனம் | 2 500 | 2 000 |
| மீள்மதிப்பீட்டு ஒதுக்கம் | 2 000 | 1 500 |
| பொது ஒதுக்கம் | 1 000 | 900 |
| நிறுத்தி வைத்த வருமானங்கள் | 400 | 300 |
| வங்கிக்கடன் | - | 900 |
| வியாபாரக் கொடுக்குமதிகள் | 380 | 300 |
| அட்டுறு வருமானவரி | 430 | 390 |
| கடன்வட்டி | 350 | 300 |
| ஏனைய செலவுகள் | 70 | 110 |
| | 7 130 | 6 700 |

**மேலதிக தகவல்கள்**

1. நடப்பு ஆண்டில் கம்பனி ரூ.80 000 இடைக்காலப் பங்குலாபமாக சாதாரணபங்குதாரர்களுக்கு வழங்கியது.
2. 31.03.2019 இல் முடிவடைந்த ஆண்டிற்கான கம்பனியின் வருமானவரிப் பொறுப்பாக ரூ.60 000 மதிப்பிடப்பட்டது.
3. வட்டிக் கொடுப்பனவாக காசாக ரூ.20 000 வங்கிக்கடனிற்காக குறித்த வருடத்தில் வழங்கப்பட்டது.
4. ஆதனம், பொறி உபகரணம் தொடர்பான குறிப்பு பின்வருமாறு (ரூ.000')

| விபரம் | காணி | கட்டடம் | மோட்டார் வாகனம் |
|---|---|---|---|
| 01.04.2018 இல் மீதி | 1 500 | 3 000 | 1 000 |
| சேர்ப்பு | - | 1 000 | 300 |
| மீள்மதிப்பீடு | 500 | - | - |
| அகற்றல் | | | (750) |
| 31.03.2019 இல் மீதி | 2 000 | 4 000 | 550 |
| 01.04.2018 இல் திரண்ட தேய்வு மீதி | - | 500 | 250 |
| ஆண்டுக்கான தேய்வு | - | 350 | 200 |
| அகற்றல் தேய்வு | - | - | (150) |
| 2019.03.31 இல் மீதி | - | 850 | 300 |

மோட்டார் வாகன விற்பனையில் இலாபம் அல்லது நட்டம் ஏற்படவில்லை.

LKAS 07 இன் படி நேரில் முறையில் வனஜா PLC யின் காசுப்பாய்ச்சல் கூற்றைத தயாரிக்குக.

(20 புள்ளிகள்)

ஆ) 31.03.2019 இல் முடிவடைந்த ஆண்டுக்கான அபிஷேக் கம்பனியின் நிதிக்கூற்றுக்களின் சுருக்கம் வருமாறு

31.03.2019 இல் முடிவடைந்த ஆண்டுக்கான வருமானக் கூற்று

| | (ரூ.000') |
|---|---|
| விற்பனை | 2 250 |
| விற்பனைக் கிரயம் | (1 450) |
| மொத்த லாபம் | 800 |
| செலவுகள் | (450) |
| வரிக்கு முன் இலாபம் | 350 |
| வருமானவரி | (150) |
| வருடத்திற்கான இலாபம் | 200 |

31.03.2019 இல் உள்ளவாறான நிதிநிலமைக் கூற்று

| | (ரூ.000') |
|---|---|
| ஆதனம், பொறி மற்றும் உபகரணம் | 800 |
| இருப்புக்கள் | 100 |
| வியாபார வருமதியாளர் | 130 |
| காசும் காசுக்கு சமனானவையும் | 170 |
| | 1 200 |
| கூறப்பட்ட சாதாரண பங்கு மூலதனம் | 500 |
| நிறுத்தி வைத்த இலாபம் | 360 |
| வங்கிக்கடன் | 140 |
| வியாபார சென்மதியாளர் | 80 |
| அட்டுறு செலவினம் | 120 |
| | 1 200 |

செலவுகளில் கடன் வட்டி ரூ. 100 000 உள்ளடக்கப்பட்டுள்ளது.

**வேண்டப்படுவது**

கீழ்வரும் விகிதங்களைக் கணிக்குக

1. மொத்த இலாப விகிதம்
2. தேறிய இலாப விகிதம்
3. நடைமுறைவிகிதம்
4. திரவ விகிதம்
5. வட்டிக் காப்பு விகிதம்
6. கடன் உரிமை விகிதம்

(20 புள்ளிகள்)